தலைமைக் கழகப் பிரதிநிதிகள் இரா.கிரிராஜன் எம்.பி.– அழகிரி சதாசிவம் முன்னிலை!

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!



சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழுக் கூட்டம் 14.10.2026 புதன்கிழமை மதியம் 3.00 மணியளவில், சங்ககிரி பவானி மெயின் ரோட்டில் உள்ள, ஸ்ரீ வாசுதேவ் மஹால் திரு மண மண்டபத்தில்", மாவட்ட கழக அவைத் தலைவர் பி.தங்கமுத்து தலைமையில், தலை மைக் கழகப் பிரதிநிதிகள் இரா.கிரிராஜன், எம்.பி.- அழகிரி சதாசிவம் முன்னிலையில் நடை பெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர் வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள்முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பி னர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, மீனவர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்று சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் கழக தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி புதிய நகர, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளை கழக மறுசீரமைப்பு குறித்து.

கழக ஆக்கப்பணிகள் குறித்து.

டி.எம்.செல்வகணபதி
சேலம் நாடாளுமன்ற உறுப்பினர்,
சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.செயலாளர்.

மணிப்பூரில் வன்முறை!


மணிப்பூர், அக்.12- மணிப்பூர் மாநிலத்தில் குகி நாகா சமூகங்களுக்கு இடையே மீண்டும் வன் முறை வெடித்துள்ளது. 24 மணி நேரத்தில் துப்பாக்கிச் சூடு, உள்ளிட்ட வன்முறை சம்பவங்களில் 9 பேர் உயிரி ழந்தனர். 14 வீடுகள் தீவைத் துக் கொளுத்தப்பட்டன.

காம்ஜோங் மாவட்டம் சாசாத் காவல் நிலையம் அருகே, சட்டவிரோத பதுங்கு குழிகளை அழிக் கும் பாதுகாப்புப் படையி னரின் நடவடிக்கையின் போது ஏற்பட்டதுப்பாக்கிச் சூட்டில், ஐந்து குழந்தை களுக்குத் தாயான குகி பழங்குடியின பெண் உயிரி ழந்தார். இந்த சம்பவத் தைத் தொடர்ந்து இரு சமூ கங்களுக்கும் இடையே மீண்டும் மோதல் வெடித் தது.

மலை மாவட்டங்களான காம்ஜோங், உக்ருல் மற்றும் காங்போக்பி ஆகிய பகுதிக ளில் நடைபெற்ற இந் வன் முறை சம்பவங்களில் 9 பேர் உயிரிழந்தனர். 14 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் அறிக்கை!



செஞ்சி, அக்.12- விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுகஅவசர செயற்குழு ஆலோச னைக் கூட்டம் நடை பெறுவதாக விழுப்புரம் வடக்கு மாவட்ட செய லாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ் தான் தெரிவித்துள்ளார் இதுகுறித்து அவரது அறிக்கையில் கூறுகை யில்

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மைலம் மற்றும் திண்டி வனம் சட்டமன்ற தொகுதிகளுக்கான திமு கஅவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத்தலை வர் டாக்டர் ப. சேகர் தலைமையில்,முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி இராமச்சந்திரன் முன்னி லையில் நாளை 13.10. 2026 செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணி அள வில் செஞ்சி திருவண்ணா மலை சாலையில் உள்ள தமிழ் திருமகள் திருமண மண்ட பத்தில் நடை பெறுகிறது.

கூட்டத்தில் தலை மைக்கழகப்பிரதிநிதிகள் புதுவை மாநில திமுக அமைப்பாளர் புதுவை இரா.சிவா,மாநில மாண வரணி செயலாளர் ஜெ. வீரமணி ஆகியோர் பங் கேற்கின்றனர்.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள், த லை மை செ ய ற் குழு,பொதுக்குழு உறுப் பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலா ளர்கள், அனைத்து அணி களின் அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதி கள்,நிர்வாகிகள் அனை வரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்என விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னால் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தனது அறிக்கையில் தெரிவித் துள்ளார்.

பொருள்:

1.22.08.2026அன்று சென்னை அண்ணா அறி வாலயத்தில் கழகத் தலை வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் தலைமையில் நடைபெற்ற தலைமை செயற்குழு கூட்டத்தில் அறிவித்த கழக நிர்வாக மறுசீரமைப்பு தீர்மானங்களை செயல் படுத்துதல் சம்பந்தமாக,

2. ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பு களை விரிவாக்கம் செய் வது சம்பந்தமாக

3.கழக ஆக்கப்பணி கள் சம்மந்தமாக.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(10.10.2026)



1.திருப்பூர் ஏபிடி சாலையில் முன் விரோதம் காரணமாக, கல்லூரி மாணவர் வெட்டிக் கொலை, பட்ட பகலில் பயங்கரம்....

2.சென்னை அடுத்த புழல் அருகே ஒன்பது வயது சிறுமியிடம் பாலியல் தொல்லையில் ஈடுபட்ட தற்காலிக அரசு ஊழியர் சிக்கினார்....

3. கன்னியாகுமரி கலெக்டர் அலுவலகம் அருகே ரோட்டில் நடந்து சென்ற சாஃப்ட்வேர் நிறுவன பெண் ஊழியருக்கு பாலியல் தொல்லை கொடுத்த வாலிபர் சிக்கினார் ...

4. சென்னை எண்ணூர் நேரு நகரில் கொடுத்த நகையை திருப்பி கேட்ட இளம் பெண் மீது சரமாரியாக தாக்கிய ரவுடி ....

5. சென்னை கொளத்தூர் பேப்பர் மில் சாலையில் இரும்பு கடை உரிமையாளரை வழி மறித்து கத்தியை காட்டி பணம் பறித்த ரவுடி சிக்கினார்...



6. திருச்சி டவுனில் நடந்து சென்ற இளம் பெண்ணிடம் செயினை பறிக்க முயன்ற ஹெல்மெட் ஆசாமி , சிசிடிவி காட்சிகள் வெளியாகி வைரல் ஆனது ....

7. திருச்சி கண்ட்டோன்மென்ட் போலீஸ் ஸ்டேஷன் அருகே உள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் பூட்டை உடைத்து கொள்ளை முயற்சி ...

8. சென்னை வியாசர்பாடி அரசு பேருந்தில், கொலை செய்ய வேண்டுமானால் என்னை தொடர்பு கொள்ளுங்கள் என்று செல்போன் எண்ணுடன் துண்டுப் பிரசுரம் ஒட்டி இருந்ததால் பரபரப்பு ...



9. சென்னையை அடுத்த ஆவடி அருகே பிரதமர் மோடி வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்பு கொடி காட்டிய போலீஸ்காரர்....

10. மதுரை அலங்காநல்லூர் , மற்றும் திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி, ராணிப்பேட்டை உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் 5 மணி நேரத்திற்க்கும் மேலாக மின்வெட்டு, ஒரு வாரமாக தொடர்ச்சியாக மின்வெட்டு ஏற்படுவதாகவும், புகார் அளித்தும் நடவடிக்கை இல்லை எனவும் மக்கள் சாலை மறியலில் ஈடுபட்ட மக்கள்...

பாரத் மித்ரன் சமூக பொருளாதார மேம்பாட்டு அறக்கட்டளை சின்ன நெற்குணம்

ஷிவானி கல்வி அறக்கட்டளை சார்பில் இலவச கண் சிகிச்சை முகாம்!

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி, அக் 12- விழுப்புரம் மாவட் டம் செஞ்சி அடுத்த வல் லம் வட்டார வள மைய யவளாகத்தில்

பாரத் மித்ரன் சமூகப் பொருளாதார மேம் பாட்டு அறக்கட்டளை மற்றும் புதுச்சேரி அர விந்த் கண் மருத்துவ மனை, சின்ன நெற்கு ணம் ஷிவானி கல்வி அ ற க் க ட் ட ளை யின் ஏழை மற்றும் ஆதரவற் றோருக்கான முதியோர் இல்லம் சார்பில் மாபெ ரும்இலவச கண் பரிசோ தனை முகாம் நடை பெற்றது.

முகாமிற்கு முன்னாள் அமைச்சரும் விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக செயலாளர் செஞ்சி மஸ் தான் தலைமை தாங்கிமு காமினை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றி னார்.

பாரத் மித்ரன் சமூக பொருளாதார மேம் பாட்டு அறக்கட்டளை மற்றும் தொழிலாளர் நல சங்கம் நிறுவனர் முருக வேல், சின்ன நெற்கு ணம் ஷிவானி கல்வி அறக்கட்டளை மற்றும் முதியோர் இல்லம் நிறுவ னர் தமிழ் மொழி

கொ ங் க ர ப் ப ட் டு கிராம நிர்வாக அலுவலர் லட்சுமணன் ஆகிய முன் னிலை வகித்தனர்.

பாரத் மித்ரன் அறக் கட்டளை பொதுச் செய லாளர் அறவாழி

அனைவரையும் வர வேற்றார்

நிகழ்ச்சியில் கண் பொறை, சர்க்கரை நோய், கண்ணீர அழுத்த நோய், குழந்தைகளின் கண் நோய், கிட்ட பார்வை, தூரப்பார்வை, வெள்ளெழுத்து ஆகிய நோய்களுக்கு பரிசோ தனை செய்து ஆலோ சனை வழங்கப்பட்டது. கண் அறுவை சிகிச்சைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட வர்கள் பாண்டிச்சேரி அர விந்த் கண் மருத்துவம னைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்

நிகழ்ச்சியில் வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார்,வல் லம் மத்திய ஒன்றிய செய லாளர் இளம்வழுதி, கூடு தல் அரசு வழக்கறிஞர் சக்திவேல், டாக்டர்ஆ னந்த முருகன், வல்லம் ஒன்றிய கவுன்சிலர் லட் சுமி லட்சுமணன்,

ஊராட்சி மன்ற தலை வர் சகுந்தலா மகாலிங் கம்நிர்வாகிகள் தமிழர சன், கிருஷ்ணமூர்த்தி, கார்வண்ணன், மாவட்ட தலைமை ஒருங்கிணைப் பாளர் அன்பழகன், மாவட்ட ஒருங்கிணைப் பாளர் பாலகுமாரன், மாவட்டச் செயலாளர் கமலா, செஞ்சி ஒன்றிய ஒ ரு ங் கி ணை ப் பா ள ர் ரமேஷ், வல்லம் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் உத யகுமார், மற்றும் பொது மக்கள் கலந்து கொண்ட னர். மாவட்ட பாரத் மித்ரன் அறக்கட்டளை மாநில ஒருங்கிணைப்பா ளர் அகலூர் ஜோலார் தாஸ் முகாமிற்கான ஏற் பாடுகளை செய்து இருந்தார்.

ஒருங்கிணைப்பாளர் பர்வீன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

தண்டவாளத்தில் கல் வைத்து சென்னை ரயிலை கவிழ்க்க சதி!

ஜோலார்பேட்டை,அக் 12- கேரளம் மாநிலம் பாலக்காட்டில் இருந்து பழனி - திண்டுக்கல் வழி யாக சென்னை செல் லும் எக்ஸ்பிரஸ் ரெயில் நேற்று நள்ளிரவு வந்து கொண்டிருந்தது.

திருப்பத்தூர் மாவட் டம் ஜோலார்பேட்டை கேத்தாண்டப்பட்டி ரெயில் நிலையங்களுக்கி டையே காவேரிபட்டு என்ற இடத்தில் ரெயில் வந்தது. அப்போது தண் டவாளத்தில் பெரிய கல் ஒன்று வைக்கப்பட்டி ருந்தது. இதனை கண்ட ரெயில் என்ஜின் டிரை வர் அதிர்ச்சி அடைந்து சாதுரியமாக ரெயிலை நிறுத்தி னார்.

இதுகுறித்து ஜோலார் பேட்டை ரெயில் நிலைய அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார். தகவலின் பெயரில் ரெயில் நிலைய அதிகாரி கள் மற்றும் ரெயில்வே பாதுகாப்பு படை போலீசார் சம்பவ இடத் திற்கு வந்தனர்.

தண்டவாளத்தில் வைத்திருந்த கல்லை அகற்றினர். இந்த தக வலை அறிந்த பயணி கள் அதிர்ச்சியடைந்த னர். பின்னர் 20 நிமிடம் தாமதமாக ரெயில் மீண் டும் சென்னை நோக்கி புறப்பட்டு சென்றது.

இதனை தொடர்ந்து சுற்று பகுதியில் பாது காப்பு படை போலீசார் கல் வைத்த மர்ம நபர் குறித்து தேடுதல் வேட் டையில் ஈடுபட்டனர்.

அப்போது அதே பகு தியில் வாலிபர் ஒருவர் சுற்றி திரிந்தார். அவரை பிடித்து போலீசார் ரெயில்வே பாதுகாப்பு படை போலீஸ் நிலை யம் அழைத்து சென்று விசாரணை நடத்தி வரு கின்றனர். இந்த சம்ப வம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

த.வெ.க.ஆட்சியில் தொடரும் மின் வெட்டு

கும்மிடிப்பூண்டியில் மின்வெட்டால் பொதுமக்கள் அவதி!

விஜய் அரசைக் கண்டித்து பொதுமக்கள் சாலை மறியல்

கும்மிடிப்பூண்டி, அக்.12- கும்மிடிப்பூண்டியில் நள் ளிரவில் நிலவிய மின்வெட் டால் பொதுமக்கள் கடும் அ வ தி க் கு ள் ளா கி னர். தவெக அரசின் அலட்சியத் தைக் கண்டித்து, சாலை மறி யல் போராட்டத்தில் ஈடு பட்டதால் பரபரப்பு நிலவியது.

தவெக ஆட்சிக்கு வந்தது முதல் தமிழ்நாட்டில் மின் வெட்டு பிரச்சனை தலைவி ரித்தாடுகிறது. குறிப்பாக இரவில் அமலாகும் மின் வெட்டால் தூக்கத்தை இழந்து மக்கள் தவிக்கின்ற னர். இப்படி மக்கள் சொல்லொண்ணா துயரத் தில் தவிக்கும் நிலையில், அதையெல்லாம் பற்றி கிஞ் சித்தும் கவலைப்படாமல் ரீல்ஸ் போடுவதில் த.வெ.க. அரசு கவனம் செலுத்தி வரு கிறது.

இந்த நிலையில் திருவள் ளூர் மாவட்டம் கும்மிடிப் பூண்டியில் நள்ளிரவில் அறி விக்கப்படாத மின்வெட்டு அமலானது. சுமார் 4 மணி நேரம் நீடித்த மின்வெட்டால் மக்கள் தூக் கமின்றி புழுக்கத்தில் தவித் தனர். ஒரு கட்டத்தில் ஆத் திரமடைந்த மக்கள், சென்னை கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையின்பு றவழிச் சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட னர்.

சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. வேண்டுகோள்!

சேலம், அக்.12- சேலம் கிழக்கு மாவட் டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம். பி. விடுத்துள்ள வேண்டு கோள் வருமாறு:-

சேலம் கிழக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் 14-10-2026 புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வாழப்பாடியில் உள்ள தள பதி மு.க.ஸ்டாலின் அறி வாலயம் கலைஞர் அரங் கில் மாவட்ட கழக அவைத் தலைவர் மு.ரா.கருணா நிதி அவர்களின் தலைமை யில் நடைபெற உள்ளது.



இக்கூட்டத்தில் தலை மைக் கழகப் பிரதிநிதி களான, கழக சட்டத்திட் டத் திருத்தக்குழு செயலா ளர் வழக்கறிஞர் இரா.கிரி ராஜன்,MP மற்றும் கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செய லாளர் அழகிரி சதாசிவம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகி கள், தலைமை கழக செயற் குழு, பொதுக்குழு உறுப்பி னர்கள், நகர, ஒன்றிய, பேரூர், கழக செயலாளர் கள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணி அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் தவ றாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 22.08.2026 அன்று அண்ணா அறிவால யத்தில் கழக தலைவர் தலைமையில் நடைபெற்ற தலைமை செயற்குழுக்கூட் டத்தில் கழக நிர்வாக மறுசீ ரமைப்பு தீர்மானத்தின்படி ஒன்றிய, நகர, கழகம் மறுசீ ரமைப்பு குறித்து,

கழக வளர்ச்சி பணிகள்

இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.

எப்போதுவென்றான் அணையிலிருந்து

உபரிநீர் திறப்பு: ஜி.வி.மார்க்கண்டேயன் ஆய்வு!

தூத்துக்குடி, அக்12- எப்போதுவென்றான் அ ணைக்கட்டிலிருந்து கல்லாரின் அணை வரை மூன்று கிலோமீட்டர் தொலைவிற்கு தரமற்று முறைகேடான நிலையில் நடைபெறும் உபரி நீர் வெளியேறும் கரை அமைக்கும் பணியினை திடீர் ஆய்வு செய்த விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன்.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், எப்போதும்வென்றான் அணையிலிருந்து கல்லாறு அணை வரை உபரி நீர் வெளியேறும் கரையை பலப்படுத்தி தூர்வாரும் பணியினை ஸ்டெர்லைட் நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு நிதியின் கீழ் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் டெண்டர் விடப்பட்டு அறி விப்பு பலகையும் வைக்காமல் தரமற்ற முறையில் வேலை நடைபெறுவதை விளாத்தி குளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி. மார்க்கண்டேயன் ஆய்வு மேற்கொண்டு சரி யான முறையில் துறை சார்ந்த அதிகாரிகள் இந்த இடத்தை ஆய்வு செய்து பணியை தொடங்குமாறு மாவட்ட நிர்வாகத்திற்கு கண்டனத்தை தெரி வித்தார்கள். ஆய்வின் போது ஓட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் காசி விஸ்வநாதன் விளாத்தி குளம் மேற்கு ஒன்றிய செய லாளர் அன்புராஜன் விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இ ம் மா னு வே ல் எ ப் போ தும் வெ ன் ற ா ன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முத்துக்குமார் மாவட்ட பிரதிநிதிகள் வெள்ளைச்சாமி, சத்திய ராஜன் வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராதா கிருஷ்ணன் வேடநத்தம் முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் சண்முக ஆனந்த் குதிரை குளம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சண்முகையா சந்திரகிரி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சந்தனராஜ் கிளை செயலாளர்கள் பெரு மாள்சாமி, லட்சுமணன் உள்ளிட்ட பொது மக்கள் உடன் இருந்தனர்.



இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் பசும்பொன் உ.முத்துராமலிங்கத் தேவர் திருமகனாரின் 119வது ஜெயந்தி விழாவை முன்னிட்டு, எட்டையாபுரத்தில் நகர முக்குலத்தோர் சங்கம் இளைஞரணி மற்றும் இராமனூத்து, ஈராச்சி,கசவன் குன்று,துறையூர், முதலிபட்டி, இளம்புவனம், தலைக்காட்டுபுரம்,செமபுதூர் சுற்றுவட்டார முக்குலத்தோர் இணைந்து நடத்தும் மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி.மார்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் நவநீத கண்ணன், இமானுவேல், எட்டையாபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் ராமலட்சுமி சங்கரநாராயணன், மாவட்ட பிரதிநிதி கல்லடிவீரன், வடக்கு மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் M.R. முனியசாமி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.